REGD. No. M. 6311 'PHONE No. 55630

தனி இதழ் ஓரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 184

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: தை 2உ வெள்ளி (15-1-54) ★ ★ ★ வெளியீடு: தை 3உ சனி (16-1-54)

"ஆச்சாரியார் இரும்பை ஒத்தவர்!"

'சீக்கிரம் சூடேருது; ஏறினால் சீக்கிரம் தணியாது!'

'அவர் நிலைமை செத்தப் பாம்பென்றுய் விட்டது!'

'அதை வெளியே எறிவது யார் என்ற பிரச்சினைதான் இருப்பது!'

தஞ்சை பொதுக்கூட்டத்தில் அண்ணாதுரை பேச்சு

"எங்களை உள்ளே தள்ளிவிட்டால் ஒன்றுமே நடைபெருது என்று நினைத்துக்கொண்டார் ஆச்சாரியார். யாரோ ஒரு பைத்தியக்காரன், 9 மாதங்கள் கர்ப்பிணியாயிருக்கும் ஒரு பெண்ணின் மேல் கோபங்கொண்டு, அந்த ஊரிலிருந்த வைத்தியனைப் பக்குவமாக வெளியூருக்கு அனுப்பி விட்டானும்! காரணம், பிரசவ காலத்தில் வைத்தியர் இல்லாத காரணத்தால், அந்தக் கர்ப்பிணி கொஞ்சம் அவஸ்தை படட்டும், என்ற நோக்கத்தோடு!

"வைத்தியர் இருந்திருந்தால் கொஞ்சம் மெதுவாக வெளியே வந்திருக்கும் குழந்தை—வைத்தியர் இல்லாத காரணத்தால், ஒரே ஒரு உதை உதைத்துவிட்டு, குழந்தை வெளியே வந்துவிட்டது. அதைப்போல, நாங்கள் வெளியே இருந்திருந்தாலும், கிளர்ச்சி என்ற குழந்தையைப் பக்குவமாக, வெளியே கொண்டுவந்திருப்போம். வைத்தியர்களாக எங்களை எண்ணி, உள்ளே பிடித்து வைத்துவிட்டதால், குழந்தை, தாயின் கர்ப்பத்தை உதைத்துக்கொண்டு வந்ததைப் போல, ஒரே நாளில், ஜூலை 15-ல், சென்னைக் கடற்கரை முதல், கன்னியாகுமரி கடற்கரை வரையில் ரயில்கள் ஓடவில்லை."

—என்று, தஞ்சையில், திலகர் திடலில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்ற, தோழர்கள் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், மதியழகன் வரவேற்புக் கூட்டத்தில், நன்றி தெரிவித்துப் பேசுகையில், பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசினர்:—

'நம்முடைய சிந்தை கலங்கிவிடும் என்று, சி. ஆர். நினைத்திருக்க மாட்டார். அவர், அவ்வளவு ஏமாளியல்ல. ஆண்டவனிடம் அருள் பெறுவது இரண்டு வழிகளில் என்கின்றனர். ஒன்று, அடித்து ஆதரிப்பது; மற்றொன்று, அணைத்து ஆதரிப்பது. இதில் முதல் ரகத்தைச் சேர்ந்தவர் ஆச்சாரியார். 'அடித்து, ஆதரிப்போம்' என்ற முடிவுக்கு வந்துவிட்டார். ஆசையாலேதான், அவருக்குப் பின்னல் காங்கிரஸ்காரரிடம் இந்த நாட்டை ஒப்படைக்க, அவர் எண்ணவில்லை. இந்த நாட்டுக்குடையவரான நம்மிடமே ஒப்படைத்துவிட வேண்டும்—என்ற முடிவுக்கு வந்துவிட்டார். இதை நான், நன்றாக உணர்ந்துகொண்டிருக்கிறேன். ஏனெனில், சுமார் பத்து-பதினைந்து ஆண்டுகளாக அவருடைய அரசியல் போக்கைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கின்றேன். அதற்காக அவர், நம்மிடம் இந்தப் பரீட்சையை நடத்தி, 'தேறுகிறார்களா, இல்லையா' என்று பார்த்திருக்கிறார். நாமும் ஒருவர் தவறாமல் தேறிவிட்டோம்."

★

தலைவர் அவர்களே! தோழர்களே! உங்களை வருக்கும் வணக்கம். தஞ்சை மாவட்டமும் சரி, நகரமும் சரி, நமதியக்கப் பணியில் சமயம் நேர்ந்தபோதெல்லாம் தீவிரமாக கலந்துகொண்டிருக்கிறது.

புயல் நிவாரண நிதியைச் சேர்த்து, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இந்த தஞ்சை மாவட்டமும், நகரமும் பெருந்தொண்டாற்றியிருக்கின்றது. இதன் ஒத்துழைப்பால் 26,000 ரூபாய் பெறுமான முன்னேற்றக் கைத்தறித் துணிகளை வாங்கி ஏழைகளுக்கு அளித்தோம்.

இதை போன்ற பெரிய கூட்டங்கள் 5, 6 நடத்தியிருக்கின்றது தஞ்சை மாநகரம். இதைப்போல் கமது கழகமும், நீங்களும் காட்டிய உற்சாகம், ஏட்டிலே மட்டுமல்லாமல், நாட்டிலேயும்—மனதிலேயும் பதிய வேண்டியதாகிறது. நீங்கள் காட்டிய உற்சாகத்தையும், அன்பு மொழிகளையும் எண்ணும்போது, எங்கள் சிறைச் சென்று வந்த மாதிரியில்லை—மேலும், மேலும் சிறைச் செல்ல ஊக்கமளிக்கிறது.

நாங்கள் ஒரு ஐந்தாறு பேர்கள்தான், சிறைச்சாலையிலே, 'பி' வகுப்பு வசதியைப் பெற்று, சுகமான வேலைகள் ஒன்றும் செய்யாமல், சுகமாக இருந்தோம்; மற்ற தோழர்கள் சுமார் ஐயாயிரம் பேர், கஞ்சி குடித்திருக்கின்றார்கள்; கடினமான வேலைகள் செய்திருக்கின்றார்கள்; அல்லலையும் தொல்லையையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

'சி' வகுப்பு பெற்று, கம்பளியையும் [illegible]யையும் இணைத்து, செக்கில் தொழில் செய்திருக்கிறார்கள்; நச்சுப் பூச்சிகளின் கடிக்கு இரத்தத்தைக் கொடுத்திருக்கின்றார்கள்; முரட்டு வேலைகள் பல செய்து, காலிலும் கையிலும் தழும்பேறப்பெற்றிருக்கின்றார்கள்; அவர்கள் அனைவருக்கும் தி. மு. கழகத்தின் சார்பாக நன்றி. உண்மையான தியாகிகள் அவர்கள்தான். உங்கள் வரவேற்பை மனமார அவர்களுக்கு அளிக்கின்றேன். அவர்கள் பெயர் உங்களில் பலருக்குத் தெரியாது.

இந்த மாவட்டத்திலே அம்மையப்பன் என்ற ஊர்—ஒரு சிறிய கிராமம்; அந்தக் கிராமத்திலிருந்து மாத்திரம் 40 பேர் சிறைச் சென்று இருக்கின்றார்கள்; அதனால், அவர்கள் ஒய்ந்துவிடவில்லை.

"தலைவ இவ்வளவு நாட்கள் பிரிந்திருந்தோமே, தந்தையின் அன்பு மொழி கேட்காமலிருந்தோமே, மக்கள் முகத்தைக் காணாதிருந்தோமே, குழந்தைகளிடம் கொஞ்சாமல் இவ்வளவு நாட்கள் கடுஞ்சிறையில் இருந்தோமே — இப்போதுதானே வெளியே வந்திருக்கிறோம்—இன்னும் சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்," என்று நினைக்கின்றார்களா? 'மீண்டும் எப்போது போர்,' என்று கேட்ட வண்ணம் உள்ளனர்.

வெளியே வந்தவர்கள் மாத்திரமா இப்படிக் கேட்கிறார்கள்? கழகத் தோழர்கள் மட்டுமா இப்படிக் கேட்கிறார்கள்? சிறைக்குள்ளே இருப்பவர்கள், பழைய கேடிகள், கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு கடுஞ்சிறையில் இருப்போர், தண்டனைச் செய்து தண்டனை அடைந்தோர் எல்லாரும் பார்த்து எங்களைக் கேட்டார்கள்—'நீங்கள் ஏன் உள்ளே வந்தீர்கள்' என்று! நாங்கள் காரணத்தைக் கூறினோம். 'நாங்களும் வெளியே வந்த பிறகு, மனிலைத்திருந்தி, கட்சியின் புனித முத்திரையைப் பெறுகிறோம்,' என்றார்கள்.

இந்தப் போராட்டம், தியாகத் தழும்பேறிய செல்வங்களை, கொள்கைக் கோமான்களை, சிறந்தஞ்சா சிங்கங்களைத் தேடித் தந்தது. அவசரத்தில் தோன்றியதல்ல — ஆவேசக் கிளர்ச்சி—ஆகாத முடிவுமல்ல—ஆத்திரத்தின் விளைவுமல்ல இது. மாநாடுகள் மூலம், தி. க., தி. மு. க. கழகங்களின் மூலம், கம்யூனிஸ்டு கட்சியின் மூலம், ஏன், காங்கிரசிலே இருக்கிற பல பெருந்தனத்தார் மூலம் கல்வித் திட்டத்தைக் கைவிடும்படி எடுத்துச் சொல்லியும், கேட்காத காரணத்தால் ஏற்பட்டதான் இந்தப் போராட்டம். இவ்வளவு இளைஞர்களையும், போராட்டத்தையும் தேடித் தந்த ஆச்சாரியாருக்கு என் நன்றி.

இதற்கு முன்னால் நாம் அவரைத் தீண்டியதில்லை; நம்மையும் அவர், தீண்டியதில்லை. பெரியார், இந்தி எழுத்துக்களை அழிக்க வேண்டும் என்றபோது, நானும் உடன் சென்றேன். அப்போது நம்மைப் பிடித்தால், சிறைச்சாலையில் தள்ளினால், வளர்ந்துவிடுவோம்—செல்வாக்குப் பெற்றுவிடுவோம் — என்றெல்லாம் நினைத்த ஆச்சாரியார், இப்போது நம்மைத் தீண்டியிருக்கின்றார்; ஆனால், முன்னே அவரைத் தீண்டியவர்கள் எல்லாம், இப்போது, 'தீண்டினால் திருநீல கண்டம்,' என்றிருந்துவிட்டார்கள்.

"ஆச்சாரியாருக்குக் கோபம் சீக்கிரத்தில் வராது; வந்தால் சீக்கிரம் ஆறாது— அவர் இரும்பைப் போல! இரும்பில் சீக்கிரம் சூடேறாது—ஏறினால், சீக்கிரம் தணியாது. நாமெல்லாம் அலுமினியம், தங்கம், வெள்ளியைப்போல — சீக்கிரம் சூடேறிவிடும்; அதைபோலவே ஆறிவிடும்.

ஆசையால், எப்படி நிஜாமையும் ஒழித்து, சர்க்காருக்கும் கேடு தேடினானோ ரஜ்வி தன்னுடைய ரஜாக்கர் படை மூலம் — அதைப்போல, காங்கிரஸையும் ஒழித்து, சர்க்காரையும் ஒழிக்க ஆச்சாரியார் ஒரு ரஜ்வியாக இருக்கிறார் காங்கிரசுக்கு!

அதனால்தான் அவர்மேல் நம்பிக்கையில்லை என்கிறார்கள். அவரும், இந்தக் கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கி விட்டால், இந்த பையல்கள் கொட்டமடிப்பார்களே என்று வெட்கப்படுகிறார். அதனால்தான் ஒப்பாரி வைத்து அழுவதைப்போல 'என்னை, முதலில் வா, வா, என்றார்கள்; இப்போது போ, போ என்கிறார்கள்,' என்று ஓலமிடுகிறார்கள். நிலைமை, செத்த பாம்பென்றாய் விட்டது! பாம்பு செத்தது, செத்ததுதான்! ஆனால், யார் அதை எடுத்து வெளியே எறிவது என்ற பிரச்னைதான்!

டால்மியாபுரம் என்ற பேரிடில், 'கல்லக்குடி' என்று அச்சடித்த தாளை கருணாநிதி ஒட்டினார்; கண்ணதாசன் ஒட்டினார்; அதற்குக் காவல் இருந்தவர் புரிந்து கொண்டிருக்கிறார்கள் போலீஸ்காரர்கள். போராட்டம் தொடங்குவதற்கு முன்பு, 'ஒட்டவிட மாட்டோம்' என்று காவல் புரிந்தார்கள்; ஒட்டியபின், 'யாரையும் கிழிக்க விடமாட்டோம்,' என்று காவல் புரிகின்றார்கள். இதில் யாருக்கு வெற்றி என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நமக்கா, சர்க்காருக்கா?

'மீண்டும் எப்போது போர்? நான் குறித்தனுப்புங்கள்,' என்று, பல தோழர்கள், என்னை நேரிலும், கடித மூலமும் கேட்டிருக்கின்றார்கள்.

'கல்லக்குடி' என்றிருக்கும் தாளை, சர்க்கார் கிழித்தால், மீண்டும் போர் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'இந்த வெட்கங்கெட்ட நிலையிலே இருந்து நீ என்று மாறுகிறாயோ, அன்றுதான் சரியான ஜனநாயகம் மலர முடியும்' என்று சர்க்காருக்குத் தெரிவிக்கிறோம்.

இப்போது அவரால் கொண்டு வரப்பட்டிருக்கும் கல்விமுறை தண்ணீர்ப் பந்தலைப் போன்றதாகும். முதன்முதலில் கட்டித் தயிராக ஊறறி, பிறகு, ஆட்கள் அதிகமாக வரவர, தயிரில் நீரைக் கலக்கி மோராக்கி விடுவதைப்போல, கல்வியின் தரத்தைக் குறைத்துவிடுகிறார். இந்த நிலையிலே, கல்வியின் தரத்தை நீர்த்துளியாக்கினால், வருமா இந்த நாட்டுக்கு விஞ்ஞன அறிவு? வருமா இந்த நாட்டுக்கு கலை அறிவு? வருமா இந்த நாட்டுக்கு கல்வி அறிவு?

இதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த நம்மைப் பார்த்துத்தான் சீறினார் ஆச்சாரியார். 'நானு, அவர்களைப் பிடித்து உள்ளே அனுப்பினேன்; நீதிமன்றம் தண்டித்தது; அதற்கு நான் என்ன

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 15—1—1954 வெள்ளி

திட்டங்களும், தீட்டும் வகையும்!

ஒவ்வொருவருக்கும்—சமூகத்தில் உறுப்பினராக இருக்கும் ஒவ்வொரு தனி மனிதருக்கும், சமூகத்தைப் பற்றிய பல துறைகளும், அவற்றைப் பற்றிய முழு விவரங்களும் நுணுக்கங்களும் தெரிந்திருக்க முடியாது. யாரேனும் முயன்றாலும், முழு அளவும் தெரிந்துகொள்ள இயலாது. ஏனென்றால், தற்காலத்தில் ஒவ்வொரு சமூகத்துறையிலும் அடைந்து வருகிற முன்னேற்றமும், அவற்றைப்பற்றி நாள்தோறும் குவிகிற கருத்துக்களும், அளவில், வளர்ந்து கொண்டே போகின்றன.

எனவே, ஒவ்வொரு அறிவியல் துறையிலும்; அதிலும், ஒரு குறிப்பிட்ட பகுதியிலும் தேர்ச்சி பெற்ற ஒரு சில வல்லுனரைத் தவிர, மற்றபடி சாதாரண மனிதர்களால், முழு அளவு தெரிந்து கொண்டிருப்பதில்லை. இப்படித்தான், மருத்துவம்—பொறியியல்—கல்வி போன்ற பலவேறு துறைகளில் ஆங்காங்குள்ள பெரிய ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள் ஆகியவர்களுடைய கருத்தை, அந்தத் துறையைப் பொறுத்தவரையில் நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

உதாரணமாக, மலேரியா வியாதி என்றால், அந்த வியாதி எப்படி வருகிறது, குணக்குறிகள் எப்படிப்பட்டவை, எத்தகைய மருந்து கொடுத்தால் அது தீரும் என்ற ஆராய்ச்சியும், தெளிவும், டாக்டருக்குத்தான் நன்றாகத் தெரிந்திருக்கிறது. அதனால் தான், மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டவன், டாக்டர் தருகிற மருந்தை ஏற்றுக்கொள்கிறான்.

அதைப்போல அந்தந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்களுடைய ஆலோசனையைப் பெற, நாம் முயல்கிறோம்; ஆனாலும், ஒரு துறையில் ஒருவன் பயிற்சி பெற்ற காரணத்தினால்—நம்பிக்கையினால் மட்டும் நாம் அவர்களுடைய யோசனைகளை முழுவதும் ஏற்றுக்கொள்ளுவதில்லை. அந்த யோசனைகளின்படி நடந்தால், கிடைக்கும் பலனைப் பொறுத்துதான் நமது நம்பிக்கையிருக்கிறது.

ஒரு டாக்டர், எவ்வளவுதான் சிறந்தவர், மருந்துகளின் வகை தெரிந்தவர், நோயின் குணங்களைக் கண்டுபிடிக்கக் கூடியவர் என்று போற்றப்பட்டபோதிலும், அவர் கொடுக்கிற மருந்துகள் பலனில்லாமற் போனால், அவரிடம் போகிற பிணியாளிகள் எல்லோரும் குணம் எதுவும் அடையவில்லையென்று காணப்பட்டால், அவர் எவ்வளவுதான் மேதாவி என்றாலும், அவர் கொடுக்கிற மருந்து எவ்வளவுதான் சிறந்தது என்றாலும், அந்த டாக்டர் சொல்லுகிற முறையின்படி நடக்க எவரும் முன்வருவதில்லை. இவர் சொல்லுகிற முறை சரியில்லை, கொடுக்கிற மருந்து குறைபாடுடையது, என்று வேறொரு டாக்டரிடம்தான் போவார்கள்.

ஆகவே, ஒவ்வொரு அறிவியல் சமூகவியல், பொருளியல் துறைகளில் இருக்கும் சிறந்த பேரறிஞர்களைக் கொண்டுதான் அந்தத் துறைகளில் செய்ய வேண்டிய — செய்யக்கூடிய மாறுதல்களைச் செய்ய முயல வேண்டும்; அவர்களால்தான் உண்மையான குறைபாடுகளை யுணர்ந்து, அதற்குத் தக்க திட்டங்களைத் தீட்டித் தர முடியும். ஒருதலைப்பட்சமாக, அவர்கள் முன்கூட்டியே உள்ளனர் என்று நாம் சந்தேகப்படும்படி யிருந்தாலன்றி, அவர்கள் தரும் திட்டங்களை வைத்துத்தான், நாம் குறைகளைத் தீர்க்க முயலுகிறோம். குறைகள் தீராவிட்டால், எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காவிட்டால், அந்தத் திட்டங்கள் சரியானவையல்லவென்று வேறு பலன் தரும் முறைகளைப் பின்பற்ற முற்படவேண்டும்.

மேல் நாடுகளில், அத்தகைய முறையில்தான், ஒவ்வொரு துறையைப் பற்றிய திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. நம் நாட்டிலோ, முன்பின்னறியாதவர்கள்கூட, ஒன்றைப் பற்றி திட்டங்கள் தீட்டிவிடுகின்றனர். அதிலும், அதிகார பீடத்தில் இருந்தால், 'நானே மாபெரும் மகான்; தந்திடும் வரப்பிரசாதம் இதுவே! எதிர்ப்புகள் வந்தால் இரும்புக் கரம் கொண்டு நசுக்கி, என் திட்டத்தை நிறைவேற்றியே வைப்பேன்!" என்று ஆர்ப்பரிக்கும் அளவுக்கு ஆணவப் போக்கும் இருந்தால, கேட்க வேண்டியதில்லை! புதுத் திட்டங்களைப் போடுகின்றனர், அதிகாரங்கொண்டு அமுலாக்கிவிடுகின்றனர்—அதன் விளைவு தெரியாமல், அது உண்டாக்குகிற அழிவின் அளவு தெரியாமல்!

இந்திய உபகண்டத்தின் பல்வேறு பகுதிகளில் மத்திய அரசாங்கத்தினாலும், மாநில அரசுகளாலும் போடப்பட்டு அமுலாக்கப்படும் திட்டங்கள் திறமையற்ற—வகையறியாதார் ஆட்சிபீடத்தில் எப்படியோ அமர்ந்துவிட்ட காரணத்தினால் போடப்படும் திட்டங்களானதினால், நாட்டிலே நிலவுகிற குறைபாடுகளை நீக்கவில்லையென்பதுடன், அக்குறைகளை அதிகரிக்கும் விதத்திலேயே இருக்கின்றன. காரணம், இங்குள்ள ஆட்சி முறை. அதில் அமர்ந்திருக்கும் ஆளவந்தார்களும் திறமையற்றவர்கள்; குறைகளை அகற்ற நீக்கும் வழியறியாதவர்கள். மேலும், அந்தந்த துறைகளில் சிறந்தவர் தரும் அரிய யோசனைகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை—அரசியல் வேறுபாடுகளால், அதிகாரப் போதையால்!

நோயின் தன்மையும் தெரியாமல், எதிரே இருக்கும் மருந்துகளின் வகையும் உணராமல், யாரோ ஒரு வழிப்போக்கன், டாக்டருடைய சட்டையை மட்டும் மாட்டிக்கொண்டு, மருந்து கொடுக்க ஆரம்பித்தால், அவனிடம் வந்த நோயாளிகளின் கதி என்னவாகும்?

அதைப்போல, நாட்டிலே நிலவுகிற குறைபாடுகளையும் அறிந்துகொள்ளாமல், அவற்றை நீக்கிடும் வகைகளையும் உணர்ந்துகொள்ளாமல், நமதுடைய ஆளவந்தார்கள்—டில்லி அதிபர்கள், சென்னை முதலவர்கள்—போடுகிற திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டதிலிருந்து, ஐம்பதாண்டுகளாக ஒரு தனி மனிதருடைய மூளையில் குடைந்து கொண்டிருந்துவிட்டு, அவர், ஆட்சியில் நுழைந்தபொழுது, திடீரென்று வெளிப்படுகிற அபூர்வ ஆரம்பக் கல்வித் திட்டங்கள் வரை, பலன் எதுவும் அளிக்கவில்லை.

காரணம், அவர்கள் நமது சமூகத்தின்—நாட்டின் குறைகளை உணரவில்லை. அவற்றைத் திருத்தும் திறமையோ, வழியோ அவர்களிடம் கிடையாது.

திறமையற்ற போலி வைத்தியனிடம் மருந்து சாப்பிட்டால், நோய் முற்றுமே தவிர, குணம் கிடைக்காது. அதைப்போல, திறமையற்ற ஆட்சியாளரிடம் சிக்கிய நாடும், குறைகள் நீங்கி, வளமடையாது.

'காங்கிரஸ் ஆட்சியாளர் தவறிழைத்துள்ளனர்'

'அலகாபாத் மாணவர்கள் போக்கிற்கு அதிகாரிகளே காரணம்!'

நாட்டின் பொருளாதார மூலம் பற்றி யூனியன் அமைச்சர் கித்வாய்

கான்பூர், ஜன. 13—

"அனுபவம் இல்லாமையினால் முன்பு காங்கிரசுத் தலைவர்களோ, அரசாங்கங்களோ சில தவறுகளைச் செய்திருக்கலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்த காங்கிரசுக்காரர்கள், சுதந்திர இந்தியாவின் நிர்வாகிகளாகிய பின்பு தவறுகள் ஏற்படுவது இயற்கையே.

"தக்க சமயத்திற்கு ஏற்றபடி அதிகாரிகள் நடந்து கொண்டிருந்தால், லட்சுமணபுரி, அலகாபாத் ஆகிய பல்கலைக் கழகங்களில் ஏற்பட்ட கலவரங்களை ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம்."

"நாட்டில் எல்லாத் துறைகளிலும் உற்பத்தி பெருகியிருக்கிறது; ஆனால், வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் இருந்துகொண்டே இருக்கிறது. இது ஓர் முரண்பாடான நிலையாக இருக்கிறது. இதிலிருந்து எங்கோ, ஏதோ சில தவறுகள் இருக்கின்றன வென்று அர்த்தமாகிறது,'

என்று, இங்குள்ள டி. ஏ. வி. கல்லூரியில், தாகூர் கலைச்சாரக் கழகத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், இந்திய உணவு அமைச்சர் ரபி அகமத் கித்வாய் கூறினார்.

நாட்டின் நிருவாகத்தில் பங்கு கொள்ளத் தங்களைத் தயார் செய்துகொள்ளுமாறு இளைஞர்களைக் கேட்டுக் கொண்டு அவர் மேலும் பேசியதாவது:—

"நாட்டில் உள்ள இளைஞர்கள் நிருவாகத்தில் நுழைந்து, நாட்டுப் பிரச்னைகளைத் தங்கள் வழிகளுக் கொண்டுவர வேண்டும் இன்று இந்தியாவிற்கு புது இரத்தமும், புதிய நாட்டுப் பற்றும் அறிவும் தான் தேவை."

ஆகையால், மேற்படி பிரச்னைகளைப் பற்றிப் பரிசீலனை செய்து இவைகளுக்குப் பரிகாரம் காணும்படி இளைஞர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

"நாட்டின் உணவு நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் பீதியடையத் தேவையே கிடையாது இதே வளர்ச்சி நிலை, தொடர்ந்து இருந்துவந்தால், உணவுப் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் நிலைக்கு இந்தியா வந்துவிடும்."

ஏமாற்றிப் பிழைக்கும் தொழிலுக்கு முடிவு!

பாட்னா, ஜன 15—

தரகர்களை கட்டுப்படுத்தவும், வசியம் செய்பவர்களும் மற்றும் பலர்களைத் தண்டிக்க வகை இந்திய பீனல் கோடிற்கு திருத்தம் கொண்டுவரும் இந்திய சர்க்கார் யோசனையை, பீகார் சர்க்கார் ஆதரித்துள்ளது.

இவை சம்பந்தமான விவகாரங்கள் மிக மிக அதிகரித்து விட்டதென்றும், இம்மாதிரியான காரியங்களால் சமூகத்தினருக்குப் பெரும் தீங்கு ஏற்படுகிறதென்றும் கருதப்படுகிறது

இம்மாதிரி ஏமாற்றிப் பிழைப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியே இந்திய பீனல் கோடு திருத்தப்படவிருக்கிறது

தொழிற் கல்விக்கு ஆலோசனை நிறுவனம்

சென்னை, ஜன. 15—

தொழிற் கல்விக்கான ஆலோசனை நிறுவனம் ஒன்றை மத்திய சர்க்காரிலும், விரும்பும் மாநிலங்களிலும் ஏற்படுத்துவது குறித்து இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகிறது. சென்னை மாநிலம் இம்மாதிரி நிறுவனத்தை இப்போது ஏற்படுத்த உத்தேசிக்கவில்லை என்று தெரிகிறது.

அணுவைப் பிளக்கும் இயந்திரம்

நியூயார்க், ஜன. 15—

அணுவைப் பிளக்கும் இயந்திரம் ஒன்றை, அமெரிக்கா, 71,42,100 பவுன் செலவில் தயாரிக்கப்போகிறது.

2,000 பேர்களுக்கு ஒரு டாக்டர்

இந்திய சர்க்கார் திட்டம்

சென்னை, ஜன. 15—

மக்கள் தொகையில் 2,000 பேர்களுக்கு ஒரு டாக்டர் வீதம் வசதி ஏற்படுத்த டாக்டர்கள் பயிற்சி திட்டம் ஒன்றை இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகிறது.

கிராமப் பகுதிகளில், டாக்டர்கள் தேவை மிக அதிகரித்து வருவதால், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுபவர்கள், கிராமங்களிலேயே சேவை செய்யும்படியாக இருக்கும்.

1941—42-ல், பதிவு செய்து கொள்ளப்பட்ட டாக்டர்கள் 47,000 பேர்கள்தான் இந்தியாவில் இருந்தனர்; 1951—52-ல், இந்த எண்ணிக்கை 61,481 ஆக உயர்ந்தது.

"1971-ல், இன்னும் 1,85,000 டாக்டர்கள் ஏற்பட்டால்தான், 'இரண்டாயிரம் பேர்களுக்கு ஒரு டாக்டர்,' என்ற நிலைமை ஏற்படும்," என்று சுகாதார அபிவிருத்திக் கமிட்டி கூறுகிறது.

பாகிஸ்தானுக்கு நேருவின் வருகை

லண்டன், ஜன. 12—

எகிப்து ஜனாதிபதி நெகுப் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யலாம் எனத் திட்டவட்டமாகத் தெரிகிறது.

துருக்கி ஜனாதிபதி, ஸவூதி அரேபிய மன்னர், ஈராக் மன்னர் ஆகியோர்களும் வெகு சீக்கிரத்தில் அங்கு வருவர் என்று தெரிகிறது.

இவர்களின் வருகையில், அரசியல் நோக்கம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

திட்டக் கமிஷன் முயற்சி சரியல்ல!

பாட்னா, ஜன. 13—

"ஒவ்வொரு கிராமமும், கால விரைவில் தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதாக விளங்கவேண்டும்; எங்கேயோ இருந்துகொண்டு, கிராமப் பிரச்னைகளைத் தீர்க்க, திட்டக் கமிஷன் முயலுவதை சரி என்று நான் சொல்லமாட்டேன்," என்று, ஆச்சாரிய வினோபா பாவே கூறினார்.

பாடப் புத்தகங்கள் ஆராய்ச்சி நிறுவனம்

சென்னை, ஜன. 15—

இப்போது எல்லா மாநிலங்களிலுமுள்ள பாடப் புத்தகங்களை ஆராயவும், பாடப் புத்தகங்கள் என்ன நோக்கத்துடன் எழுதப்பட வேண்டுமென்பதற்கு வரையறை ஏற்படுத்தவும்—மத்திய கல்வி போர்டு, திட்டக் கமிஷன் ஆகியவைகளின் சிபார்சுகளின் பேரில், இந்திய சர்க்கார், பாடப் புத்தக ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

"மதிவாணன்" முதலாண்டு நிறைவு விழா

சென்னை, ஜன. 14—

சென்னை, 37-வது வட்ட தி.மு. கழகச் செயலாளர் தோழர் இளவரசு அவர்களின் மகன் மதிவாணனின் முதலாண்டு நிறைவு விழா கூட்டம் 12—1—54 மாலை அவர் இல்லத்தில் நடைபெற்றது. தோழர் இளம்பரிதி தலைமை வகித்தார். தோழர்கள் என். வி. நடராசன், தென்னரசு, புரட்சிமணி, கோதண்டபாணி, பொன்னுரங்கம், ஆகியோர் மதிவாணனுக்கு வாழ்த்து கூறினர். உறவினர்களும் நண்பர்களும் பரிசுகள் வழங்கினர். இறுதியில் தோழர் இளவரசு அனைவருக்கும் நன்றி கூறினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2, நன்கொடை அளிக்கப்பட்டது — வரப் பெற்றோம்—பொறுப்பாளர்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, ஜன. 15—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை, விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அகிர அய்யர் முன்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சர்க்கார் தரப்பு சாட்சியங்களின் விவரம் தொடர்ந்து தரப்படுகிறது:—

72-வது சாட்சி

பிராசிகியூஷன் தரப்பில், 72-வது சாட்சியாக மகாலிங்க அய்யர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் ஹார்வி மில்லின் வேலை பார்த்து விலகினவன்; புதுக்கிராமத்தில் வசிக்கிறேன்; பிராமண சங்கத்தின் தலைவன்; என்னுடைய வீடு, பெருமாள் கோயிலுக்கு தெற்கே, கிழக்கு பார்த்தாற்போல் இருக்கிறது; கோயிலுக்கும் வீட்டுக்கு மிடையே உள்ள தூரம் சுமார் 200 அடி; இந்த வரிசையில் உள்ள எல்லா வீடுகளும் கிழக்கு பார்த்தவைதான்; பெருமாள் கோயிலுக்கு முன்பாக ஒரு நந்தவனம் இருக்கிறது; இந்த நந்தவனத்திற்கு வடக்கே கிழக்கு—மேற்கில் ஒரு பாதை செல்லுகிறது. ஜூலை 15-ந் தேதியன்று நான் வீட்டிலேயே இருந்தேன்; என் வீட்டு விலாசம் நெ 66 புதுக்கிராமம்; காலை 9-45 மணி சுமாருக்கு தெருவில் சப்தம் கேட்டது; ஆகவே, நான் வெளியே வந்தேன்; சீனுவாச அய்யங்கார் வீட்டு முன்பாக சுமார் 30 பேர்கள் நின்றுகொண்டிருந்ததை நான் பார்த்தேன்; அவர்களில் சிலர் வீட்டிற்குள் நுழைந்து, முன்புற ஹாலில் இருந்த சாமான்களை சேதப்படுத்தினர்; எனக்கு சப்தம் மட்டுந்தான் கேட்டது; பிறகு ஜனக்கூட்டம் கிழக்கு நோக்கிச் சென்றுவிட்டது; ராமகிருஷ்ண அய்யர் வீட்டு கேட் காம்பௌண்டில் கூட்டம் சேதமுண்டு பண்ணவில்லை. எஸ். நடராஜப் பிள்ளை வீட்டிற்குள் கூட்டம் நுழையவில்லை; சாமிகுளத்து ஐயர் வீட்டு முன்பாகக் கூட்டம் நின்றது; கூட்டத்தினரில் சிலர் கிழக்குப் பக்கமாகச் சென்றார்கள்; போலீஸ் ஊதுகுழல் சப்தம் கேட்டது; கூட்டத்தினர் கழிகளையும், கடப்பாரை முதலியவற்றை ரோட்டு ஓரத்தில் போட்டுவிட்டு, ஓடிவிட்டது; கூட்டம் மறுபடியும் ஒன்று சேர்ந்தது; என்னுடைய வீட்டின்பேரிலும் கற்கள் வீசப்பட்டன; மறுதினம் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; 57வது எதிரி ஆதிமுத்து போனதை நான் பார்த்தேன்; ஒருவேளை கூட்டத்தை மேற்பார்வையிட்டார் போலும்; எனக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 325 பென்ஷன் வருகிறது."

திரு. எம். செல்லையப்பபிள்ளை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

"நான் வீட்டிலேயேதான் இருப்பது வழக்கம்; ஜூலை 16-ந் தேதியன்று முதல் மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும் தந்தி கொடுப்பதென்று நாங்கள் முடிவு செய்தோம்; விசாரணைக் கமிட்டி முன்பு நான் சாட்சியம் கூறினேன்."

திரு. பி. ஏ. தங்கசாமி குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி சொன்னதாவது:—

"சம்பவத்துக்கு முன்னதாக 57-வது எதிரி ஆதிமுத்துவை நான் சந்தித்ததில்லை; அன்று, அவர், இரண்டு மூன்று தடவை சைக்கிளில் போனதைப் பார்த்தேன்; பிராம்மண சங்கம் 1928-ம் ஆண்டு முதல் இருந்து வருகிறது; நான் அதன் தலைவனாதலால், அதன் பணம், என்னுடைய பெயரில் பாங்கியில் இருக்கிறது; இந்த வழக்குக்காக ரூ 5000 முதல் ரூ 6000 வரை வசூலிக்கப்பட்டதாக சொல்வது சரியல்ல; நான், யார் யாரைச் சந்தித்தேனோ அவர்களுடன், என் வீட்டிலிருந்தே பேசிக்கொண்டிருந்தேன்."

73-வது சாட்சி

ரயில்வே போலீஸ் தலைமை கான்ஸ்டேபிள் ஜனுப்சையது முனவர் 73-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் சொன்னதாவது:

"மணியாச்சி ஜங்ஷன் ரயில்வே போலீஸ் ஸ்டேஷனில் நான் தலைமைக் கான்ஸ்டேபிளாக இருந்து வருகிறேன்; ஜூலை 15ந் தேதியன்று நானும், 8 கான்ஸ்டேபிள்களும் காலை 6-25 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட கோயமுத்தூர் பாஸஞ்சர் வண்டிக்குக் காவல் புரிந்து வந்தோம்; (இச்சமயத்தில் மேலுர் ரயில்வே ஸ்டேஷனில் நடந்த சம்பவங்களை சாட்சி விவரித்தார்) நான் கற்களால் தாக்கப்பட்டேன்; எனக்குத் தலையிலும் தோளிலும் காயங்கள் ஏற்பட்டன; என்னுடைய தலைப்பாகையும் சேதமுற்றது; பிரமமான எச்சரிக்கைக்குப் பிறகு நாங்கள் ஆறு ரவுண்டுகள் சுட்டோம்; பிறகு கூட்டம் கலைந்துவிட்டது; பிறபாடு வண்டியை விடும்படி நான் கார்டை கேட்டுக்கொண்டேன்; என்னுடைய கோஷ்டியினரை நான் என்ஜினுக்கு முன்பாக அழைத்துச் சென்றேன்; பிறகு வண்டி கலைந்தது; நாங்கள் வண்டியில் ஏறிக்கொண்டோம்; 17-ந் தேதியன்று நான் ட்யூட்டியிலிருந்து திரும்பியதும் காயங்களுக்குச் சிகிச்சை செய்து கொண்டேன்; காயமுண்ட போலீஸ் கான்ஸ்டேபிள்களில் ஒருவரும் ஆஸ்பத்திரிக்குப் போகும்படி சொல்லப்பட்டார்; 17ந் தேதி ஸ்பெஷல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.

திரு. எம். செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி சொன்னதாவது:

"நான் ரயில்வே போலீஸில் சென்ற இரு வருடங்களாக இருந்து வருகிறேன; ரயில்வண்டி நிறுத்தப்பட்டது, கல்வித் திட்டத்தை ஆட்சேபிப்பதற்காகத்தான் என்று எனக்குத் தெரியாது; எந்தக் கம்பார்ட்மெண்டுகளில் அபாயச் சங்கிலி இழுக்கப்பட்டதென்று எனக்குத் தெரியாது; எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் எனக்குத் தெரியாது; எந்தப் பக்கத்திலிருந்து கற்கள் வீசப்பட்டன; என்றும் எனக்குத் தெரியாது."

திரு ஆர். தண்டபாணி குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

"நாங்கள் துப்பாக்கியால் சுட்டபோது யாருக்காவது காயம் பட்டதா என்று எனக்கு ஞாபகம் இல்லை; ரயிலுக்குக் காவல் புரிவதே எங்களுடைய முக்கியமான பொறுப்பு; ஏராளமான உள்ளூர் போலீஸ் கான்ஸ்டபிள்களும் இருந்தனர்."

74-வது சாட்சி

சோமசுந்தரம் பிள்ளை 74-வது சட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:

"தூத்துக்குடி ஜெனரல் மோட்டார் கம்பெனியில் நான் குமாஸ்தா; இந்தக் கம்பெனி, கிரேட் காட்டன் ரோடில் இருக்கிறது; ஜூலை 23ந் தேதியன்று காலை சுமார் 11-15 மணிக்கு வட்ட டிப்போர் கடை சமீபத்தில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, கையில் ஒரு டைம் பீஸை வைத்திருந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒரு அத்தாட்சியை எழுதினார்; நான் அதில் கையெழுத்திட்டேன்."

75-வது சாட்சியம்

ஷண்முகம் பிள்ளை 75-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் தூத்துக்குடி தெற்கு போலீஸ் ஸ்டேஷன் ரைட்டர்; ஜூலை 15-ந் தேதியன்று ஸ்டேஷனில் நான் ட்யூட்டியில் இருந்தேன்; 185-ம் நெம்பரிடமிருந்து எனக்கு டெலிபோன் வந்தது; கருப்புச் சட்டைக் கோஷ்டியினர், புதுக்கிராமத்தில் கொள்ளையடிக்க உத்தேசித்திருப்பதாகவும், பந்தோபஸ்துக்காக அங்கு சில போலீஸ்காரர்களை அனுப்ப வேண்டுமென்றும் மேற்படி செய்தி தெரிவித்தது; பந்தோபஸ்துக்காக நான் புதுக்கிராமத்துக்கும், கிரேட் காட்டன் ரோடுக்கும் மூன்று போலீஸ் கான்ஸ்டபிள்களை அனுப்பினேன்; இதை ஜெனரல் டயரியில் குறித்துக்கொண்டேன்; காலை 9-10 மணிக்கு, வக்கீல் பத்மநாப ஐயர் ஸ்டேஷனுக்கு வந்தார்; பிராமணர் காலனியில் நிலைமை அபாயகரமாக இருப்பதாக அவர் தெரிவித்து, மேலும் உதவி வேண்டுமென்றார்; ஏற்கனவே மூன்று போலீஸ்காரர்களை அனுப்பியிருப்பதாகவும், மேற்கொண்டு போலீஸ்காரர் இல்லை என்றும் நான் கூறினேன்; பிறகு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மரமன்கான் வந்து போலீஸ் ஸ்டேஷனைக் காவல் புரிய ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்; ஒரு ஸெண்ட்ரி கான்ஸ்டபிள்தான் இருந்தார்; பந்தோபஸ்துக்காக ஏற்கனவே அனுப்பப்பட்ட மூன்று கான்ஸ்டபிள்களையும் திரும்ப அழைத்து வருமாறு இந்த ஸெண்ட்ரி கான்ஸ்டபிளை அனுப்பினேன்; அவர்கள் ஸ்டேஷனுக்குத் திரும்பினர்; விபரங்களை ஜெனரல் டயரியில் குறித்தேன்; எக்ஸிபிட் 'பி. 2' பகல் 1-45மணிக்குத்தான் என்னிடம் வந்தது; இ. பி கோ 147, 148 324 பிரிவுகள் பிரகாரம் 102-53 நெம்பரின் கீழ் குற்றமாக ரிஜிஸ்தராயிற்று; மாலை 5-20 மணிக்கு பத்மநாப ஐயரிடமிருந்து 'பி. 25' கிடைத்தது; இ. பி. கோ. 147, 148 379 பிரிவுப்படி இதை, 103-53 நெம்பரின் கீழ், குற்றமாக ரிஜிஸ்தர் செய்தேன்; இரவு 6-10 மணிக்கு பிராசிகியூஷன் தரப்பு சாட்சி 34 இடமிருந்து 'பி. 27' கிடைத்தது; இதை இ. பி. கோ. 147, 148, 336, 457 பிரிவுகள் பிரகாரம் 104-53 குற்றமாக ரிஜிஸ்தர் செய்தேன்; முதல் தகவல் ரிப்போர்ட்டுகளை சப்-இன்ஸ்பெக்டருக்கு அனுப்பினேன்."

திரு. எம். செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

"185-ம் நெம்பர் டெலிபோன், யாருக்காகக் கொடுக்கப்பட்டிருந்ததென்று எனக்குத் தெரியாது; பேசுகிறது யார் என்று கேட்டதற்குப் பதில் கிடைத்தது."

76-வது சாட்சி

போலீஸ் கான்ஸ்டபிள் நடராஜன் 76-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் தூத்துக்குடி தெற்கு போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்தவன்; ஜூலை 15-ந் தேதி காலை 9 மணி சுமாருக்கு நான் இன்னும் இரண்டு கான்ஸ்டபிள்களுடன் பந்தோபஸ்துக்காக புதுக் கிராமம் போனேன்; எங்களிடம் மூன்று துப்பாக்கிகள் இருந்தன; நாங்கள் பெருமாள் கோயில் வழியாகப் போனோம்; சுமார் அரை பர்லாங்கு தூரத்தில் 20 பேர்கள் கொண்ட ஒரு கூட்டத்தைப் பார்த்தேன்; போலீசாரைக் கண்டதும் கூட்டம் ஓடிவிட்டது; பிறகு ஸ்டேஷனிலிருந்து ஒரு கான்ஸ்டபிள் வந்தார்; ஸ்டேஷனுக்குத் திரும்பிவிடும்படி அவர் சொன்னார்; அப்படியே நாங்கள் திரும்பிவிட்டோம்; புதுக் கிராமத்தில் நாங்கள் சுமார் பத்து நிமிட நேரம் இருந்தோம்."

77-வது சாட்சி

சுப்பையா என்பவர் 77-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் தூத்துக்குடி தெற்கு ஸ்டேஷன் கான்ஸ்டபிள்; ஜூலை 15-ந் தேதியன்று நான் ஸ்டேஷனிலிருந்தபோது பந்தோபஸ்துக்காக புதுக் கிராமத்துக்கு அனுப்பப்பட்ட மூன்று கான்ஸ்டபிள்களைப் போய் அழைத்து வருமாறு எனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது."

78-வது சாட்சி

எம். என். ராமஸ்வாமி சஸ்திரி 78-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் சொன்னதாவது:—

"நான் புதுக் கிராமத்தில் வசிப்பவன்; என்னுடைய வீட்டிற்கு மேற்கில் இரண்டு வீடுகள் தள்ளி சாமி குளத்து ஐயர் வீடு இருக்கிறது; ஜூலை 15-ந் தேதி நான் வீட்டில் இருந்தேன்; காலை சுமார் 9 மணிக்கு மேற்கிலிருந்து ஏறக்குறைய 20 பேர்கள் வந்தனர்; அவர்கள் கற்களை வீசினர்; கோஷமிட்டனர்; என்னுடைய வீட்டில் டெலிபோன் இருக்கிறது; இதன் நெம்பர் 185; 'சுமார் 10 அல்லது 15 கருப்புச் சட்டையினர் ஒவ்வொரு வீட்டின்மீதும் கற்களை எறிந்து, சொத்துக்களைச் சேதப்படுத்தி, ஜனங்களைப் பயமுறுத்துவதாக' தெற்குப் போலீஸ் ஸ்டேஷனுக்கு நான் போன் செய்தேன்; உதவி வேண்டுமென்று கோரினேன்; சில போலீஸ்காரர்களை அனுப்புவதாக ஸ்டேஷன் ரைட்டர் பதில் சொன்னார்; 10-30 மணி சுமாருக்கு ஏறக்குறைய முப்பது பேர்கள் கோஷமிட்டுக்கொண்டே வந்தார்கள்; என்னுடைய வீட்டு முன்புறத்திலிருந்த மின்சார விளக்குகள், ஷேடுகளையெல்லாம் அவர்கள் உடைத்தனர்; சிறிது நேரம் கழிந்ததும் பிராசிகியூஷன் தரப்பு 57-வது சாட்சி சாமி குளத்து ஐயரின் வீடு தாக்கப்பட்டதாகவும், வீட்டிலிருந்த பெண்கள் பயமுறுத்தப்பட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன்; மேற்படியாரின் பிள்ளை இந்தியன் பாங்கியில் வேலை செய்கிறார்; சம்பவம் பற்றி அவருக்கு டெலிபோன் செய்தேன்; பிறகு 57-வது சாட்சி, டாக்டர் அகஸ்டின் வீட்டிலிருந்து எனக்கு டெலிபோன் செய்தார்; நிலைமை எவ்வாறிருக்கிறதென்று அவர் விசாரித்தார்; உயிர்ச்சேதம் எதுவுமில்லை என்றும், ஆனால், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டதாகவும் நான் தெரிவித்தேன்; மறுதினம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

திரு. எம். செல்லையப்பபிள்ளை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

"சம்பவம் நடந்த தினம், பகல் முழுதும் நான் வீட்டிலேயே இருந்தேன்; கூட்டம் போனதும் நான் 57வது சாட்சியின் வீட்டிற்குப் போனேன்; வீட்டிற்கு எதிரே நின்றேன்; நடந்ததை யெல்லாம் ராஜலட்சுமி என்னிடம் எடுத்துரைத்தாள்; வீட்டில் நடந்ததென்ன என்று தெரிந்த பிறகு, நான் 57-வது சாட்சிக்கு போன் செய்தேன்; சேதத்தைப் பார்ப்பதற்காக நான் யாரையும் அழைக்கவில்லை; போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை என் வீட்டில் விசாரித்தார்."

திரு வி. என். கந்தையா குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

"நான் ஒரு பென்ஷனர்; என்னுடைய பெயரை வெளியிடாமல், ஆனால், 185ம் நெம்பர் டெலிபோனிலிருந்து பேசுவதாகத் தெரிவித்து, உதவி வேண்டுமென்று நான் போலீசுக்கு டெலிபோன் செய்தேன்; நான் இரண்டு போலீஸ் கான்டேபிள்களைப் பார்த்தேன்; நான் ஸ்டேஷனுக்குத் தெரிவித்ததை யொட்டித்தான் அவர்கள் வந்தனரா என்பது எனக்குத் தெரியாது; ராஜலட்சுமி சொன்ன வார்த்தைகள் எனக்கு ஞாபகமில்லை; ஆனால் 10 அல்லது 15 பேர், அவளுடைய வீட்டிற்குள் நுழைந்து சொத்துக்களைச் சேதப்படுத்தி அவளுடைய நகைகளை எடுத்துச் சென்றதாக நான் அறிந்தேன்; கடவுள் கிருபையினால் அவளும், அவளுடைய குழந்தையும் உயிர் தப்பினர்."

79-வது சாட்சி

ராமகிருஷ்ண அய்யர் என்பவர், 79-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார் அவர் கூறியதாவது:—

"நான் பருத்தி வியாபாரம் செய்பவன். என்னுடைய வீடு 57-வது எதிரியின் வீட்டிற்கு மேற்கில் இருக்கிறது; எனக்கு மோட்டார் கார் இருக்கிறது; வீட்டில் காரேஜும் உண்டு; ஜூலை 15-ந் தேதியன்று என்னுடைய குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும் சமயம்; காலை சுமார் 9 மணிக்கு கண்ணாடிகள் உடைக்கப்படும் சத்தம் கேட்டது; நான் வீட்டிற்குள் போய் கதவை மூடினேன்; சத்தம் பி.ம.மாக இருந்தது; கூட்டம் போன பிறகு நான் கதவைத் திறந்து வெளியே வந்தேன்; கண்ணாடிகள், பல்புகள், நாற்காலி ஆகியவைகள் உடைந்துவிட்டதைப் பார்த்தேன்; என் மோட்டாரின் கண்ணாடி சேதமாக்கப்பட்டிருந்தது; காரேஜின் 'அஸ்பெஸ்டாஸ் ஷீட்' கிழிக்கப்பட்டிருந்தது; போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; அத்தாட்சி ஒன்றில் நான் கையெழுத்திட்டேன்; இ. ப..லிபிட் 25 ஆகத் தாக்கல் செய்யப்பட்டது."

திருப்பாப்புலியூரில் நாடகம்

17—1—54 ஞாயிறு இரவு 10 மணிக்கு, திருப்பாப்புலியூர் கலைவாணி சபாவில், முத்தமிழ் கலைக் குழு வளர்ச்சி நிதிக்காக, நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் தலைமையிலும், தோழர் இராதாமணாளன் முன்னிலையிலும் 'அரக்கு மாளிகை' என்னும் சரித்திர சாம்ராஜ்ய சரித்திர நாடகம் நடைபெறும்.

விளாத்திகுளத்தில் நாடகம்

17—1—54 ஞாயிறு இரவு, பாண்டியனூர் திடலில், தோழர் டி. கே. வி. நாதன் தலைமையில், அழகிரி கலை மன்றத்தார் நடிக்கும், தோழர் மு. கருணாநிதி தீட்டிய 'ரத்தத் திருமணம்' நாடகம் நடைபெறும்.

சென்னை 23-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம்

'சென்னை 24-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் 17—1—54 ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் செயலாளர், துணைச் செயலாளர் தேர்தல் நடைபெற இருப்பதால், கழக உறுப்பினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கருதி வரவேண்டுகிறேன்," என செயலாளர் கோ. காசிநாதன் அறிவிக்கிறார்.

ஆச்சாரியார் இரும்பை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்ய? 500 ரூபாய் அபராதம் கொடுக்கக் கூடியவர்களெல்லாம் கொடுத்துவிட்டு தாராளமாக வெளியே வந்திருக்கலாமே,' என்று ஒப்பாரம் பேசினார், ஆச்சாரியார் அன்று! ஆனால், இன்று, எங்களுக்குக் கொடுத்த தண்டனை போதாது என்று உயர்நீதிமன்றம் நோக்கிப் போயிருக்கின்றார்.

திராவிடத் திலகம் திலகர் திடலிலே கூடி, அவருடைய சுவராஜ்ய தாரப் பேச்சைப் பேச வேண்டியிருக்கிறதே என்பதற்காக வருந்துகிறேன்.

இவர்கள், ஆள்பவர்களாக இல்லாமல், வெறும் கட்சிக்காரர்களாக வெளியே இருந்து கிளர்ச்சிகள் நடத்தி தண்டனையடைந்த போது, இவர்களுக்களித்த தண்டனை போதாதென்று, வெள்ளைக்காரன் கோர்ட்டுக்குப் போனானா?

இந்த ராம ராஜ்யத்திலேதான், இந்த அகிம்சா மூர்த்தியின் ஆட்சியிலேதான், அதைக்குடி தோழர்கள் 5 மாதங்களாக சிறையிலே வாடுகின்றனர். தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் தாயார் இறந்துவிட்டார்கள்; அன்று அவரை வெளியே விடவில்லை; அந்தம்மையாரை தகனம் செய்தபிறகு வெளியே விட்டார்கள்.

இன்று, கழகத்திலே இருந்தவர்கள் மாத்திரம் சிறை சென்றார்கள்; நாளை, தெருவிலே இருப்பவர்களும் சிறைசெல்லக்கூடும். தெருவிலே நிற்பவனைப் பார்த்து, 'நீ திராவிட நாட்டை ஆதரிக்கிறாயா?' என்று கேட்டு, அவன், 'ஆமாம்' என்றால், 'நட, ஸ்டேஷனுக்கு,' என்று அழைத்துக் கொண்டு போகவும் போகக்கூடும். அந்த நிலை 1960-ல் வரலாம்.

நாம் இதுவரை எந்தக் கொள்கைக்காகப் போராடினோமோ எந்த நன்னோக்கங்களுக்காகப் போராடினோமோ, அந்த நல்ல கருத்துக்களுக்காக இனியும் போராடுவோம்.

அன்றைக்கு ஆரப்பாளையம் ரயில் கட்டிய உதவி — என்ஜினில் நெருப்பு இருந்தது, டாங்கியில் தண்ணீர் இருந்தது, இயக்கும் நீராவி போதுமான அளவு இருந்தது, டிரைவர் இருந்தார், பையர்மேன் இருந்தார், கார்டு இருந்தார், ஸ்டேஷன் மாஸ்டர் இருந்தார், வண்டியை ஓட்டுவதற்கான பணியாட்கள் அனைவருமே இருந்தார்கள் — ஆனால், வண்டி ஓடவில்லை. அது, திராவிட முன்னேற்றக் கழகம் காட்டிய சக்தி.

இதே சக்தியை வைத்துக் கொண்டு, இதோடு, நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சக்தியும் திரட்டி, '1960-ல் ரயிலைக் கவிழ்த்துவிடுவேன்,' என்றால், ரயில் கவிழாதா?

அந்தத் தாப்பாக்கம் ஜீவைக்கு நாட்டை ஓட்டாதே; உன் வல்லமையையும், உன் துப்பாக்கியின் வன்மையையும் நம்பாதே! அரசியலை நெருக்கிறோம்; இனியும், அந்த விஷக்கருத்தை வளர்க்க மாட்டாய் என்று நினைக்கிறேன்.

'எதனால் இந்தக் கிளர்ச்சி, ஏன் திராவிடநாடு,' என்று, பெரியாரிடம் வேண்டுமோனும் கேட்டு, ஒரு கூட்டத்தைக் கூட்டி வெளியிடக்கூடாதா? இதிலென்ன சிரமம்? இதைப் பேசுகின்ற இடமாக இன விழா கொண்டாட்ட மேடையா வேண்டும்?

பங்கிதான் பகுத்தறிவு என்றவர்கள், காந்தியாரை ஜின்னா விட்டது அனுப்பி னாகம் கேட்டு, பதிலில் தான் பிரிவினையை ஒப்புக்

கொள்ளவில்லையா?

அதைப்போல், திராவிட நாட்டு பிரிவினைப் பத்திரத்தில் நேரு அவர்கள் ஒப்பம் இடும் வரையில் ஓயமாட்டோம்; உறுதி இருக்கிற வரையில் குருதியைக் கொட்டிக்கொண்டிருப்போம்.

திராவிடம் டெல்லியோடு இணைந்திருப்பதால் என்ன நன்மை; பிரிந்துவிட்டால் என்ன தீமை என்ற கேள்வியின் அடிப்படையிலே எழும்பிய எங்கள் இலட்சிய கீதம் ஓயப் போவதில்லை; இது, இறுமாப்பா—இல்லை; அகங்காரமா—அல்ல; அது எங்கள் அழுத்தமான நம்பிக்கை.

இதுவரையில், எங்கள் கோரிக்கை அதிபாயமானது, அர்த்தமற்றது என்பவராவது மறுத்தது உண்டா? இனியும் மறுக்க யாராவது இருக்கிறார்களா? இல்லை. ஆகவே, திராவிட நாட்டை தனியாகப் பிரிக்கும் வரையிலும் ஓயமாட்டோம் என்று கூறிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

★★★★★★★★★★★

திராவிடர் திருநாள்

★

இராயப்பேட்டை

★

சென்னை, இராயப்பேட்டை தி. மு. கழக 37-வது வட்டத்தின் சார்பில், 17-1-54 ஞாயிறு காலை 9 மணிக்கு, திராவிடர் திருநாள் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவர்; சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும்; 37-வது வட்டத் தோழர்களும், ஏனைய தோழர்களும் இதனையே அழைப்பாகக் கருதி வருமாறு, செயலாளர் கே. இளவரசு கேட்டுக்கொள்கிறார்.

★

சிந்தாதிரிப்பேட்டை

★

17—1—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு

தலைவர்: அ. பொ. அரசு

பேசுவோர்:

தோழர் சி. பி. சிற்றரசு

„ மீ. சு. இளமுருகு

தோழியர் பொற்செல்வி

★

திருச்சி

17—1—54 ஞாயிறு காலை 9 மணிக்கு

இடம்: தேவர் மன்றம்

தலைவர்: ஜி. பராங்குசம்

பேசுவோர்:

மு. கருணாநிதி

எம். எஸ். மணி

நன்கொடை அணா 2.

★

கும்மிடிப்பூண்டி

17-1-54 மாலை 4-30 மணிக்கு

இடம்: கடை வீதி

தலைவர்: ஆ. கிருட்டிணன்

பேசுவோர்:

வி. எஸ். கோவிந்தராசன்

காஞ்சி-கல்யாணசுந்தரம்

தி. க. அருள் அரசு

★

அண்ணாமலை நகர்

16—1—54 மாலை 4 மணிக்கு, தி. மா. மு. கழகத்தின் சார்பில், திருவேட்களத்தில், விழா நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், காஞ்சி-கல்யாணசுந்தரம், க. அன்பழகன், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

★

17—1—54 மாலை 4 மணிக்கு, தோழர்கள் அண்ணாதுரை, கே. ஏ. மதியழகன், என் வி நடராசன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ஆகியோர் பேசுவர்.

★

கூண்டலேரி

16-1-54 மாலை 5 மணிக்கு, கே. என். இராசகோபால் தலைமையில் விழா நடைபெறும். என். வி. நடராசன், பூ. கணேசன் ஆகியோர் பேசுவர் இரவு 9 மணிக்கு 'ஏழையின் தோழன்' என்ற நாடகம் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

தூத்துக்குடி

17—1—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு

இடம்: திருஞானசம்பந்தர் மடத்துப் பக்கம்

பேசுவோர்:

இரே. இளவழுதி

எம். ரத்தினம்

★

வெள்ளக்கோயில்

22—1—54 வெள்ளி மாலை

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

★

இன்டுக்கல்

நகர தி. மு. கழக ஐந்தாவது ஆண்டு விழா, 31-1-54 ஞாயிறு காலை 9 மணிக்கு, சோலை ஹாலில் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, எம். எஸ். மணி, என். வி. நடராசன், என். முத்து, தோழியர்கள் அருண்மொழி பூங்கோதை ஆகியோர் பேசுவர். அது சமயம் கல்லக்குடி வழக்கு நிதி அளிக்கப்படும்.

★★★★★★★★★★★

நெல்லையில்

தூத்துக்குடி வழக்கு நிதி நாடகம்

பேட்டை ஜனாப் எஸ். பி. எஸ். அவர்களின் மாலில்

மஜீத் அரங்கில்

17—1—54 ஞாயிறு இரவு 7 மணிக்கு

நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் தலைமையில்

மதுரை திராவிட புதுமலர்ச்சி மன்றத்தாரின்

'ஒரே வழி'

நாடகம் நடைபெறும்

★★★★★★★★★★★

வெளிவந்துவிட்டது!

சிந்தனையைக் கிளறி, சீரிய கருத்துக்களைப் புகுத்தி, சிறியோர்-பெரியோர் யாவரையும் சிந்திக்கத் தூண்டும் பிரச்சாரத்தி வாய்ந்த நூல்!

சிந்தனைச் சிற்பி சிற்றரசு, கலைவாணர் என். எஸ். கே. இருவரின் முன்னுரையுடன் கூடியது!

அழகிய மூவர்ண ஜாக்கெட்டுடன் கூடியது!

விலை 4 அணாதான்!

தனிப் பிரதிக்கு 5 அணா அனுப்பவும். ஏஜெண்டுகளுக்கு தக்க கமிஷன் உண்டு. முந்திக்கொள்க.

மோகன் அண்டு கோ.,

43, லிங்கிச் செட்டி தெரு, சென்னை—1.

★★★★★★★★★★★

கைத்தறி துணி விற்பனை

காஞ்சீபுரம், ஜன. 15—

13—1—54 காலை 8 மணிக்கு, 'திராவிட நாடு' அலுவலகத்திலிருந்து, தோழர் சி. வி. எம். பி. ஏ., பி. எல், எம். எல். ஏ., தலைமையில் புறப்பட்ட முக்கிய வீதிகளின் வழியாக கைத்தறி விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் ரூ 548-10-6 க்கு விற்பனைசெய்யப்பட்டன. நகரில் உள்ள ஐவுளிக் கடையில் கைத்தறித் துணிக்கு பலகைப்பு ஏற்பட்டுள்ளது. விற்பனையில், தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, இரா. வெங்கடேசன், இ. சுந்தரமூர்த்தி, இராசமாணிக்கம், கம். அரிதாஸ் ஆகியோரும், மற்றும் இயக்கத் தோழர்களும், அனுதாபிகளும் கலந்துகொண்டனர். ஊர்வலத்தில் சேவாளர்கள் பெரிதும் ஆதரவு தந்தது குறிப்பிடத்தக்கது. (ஃ. நி)

தாராவி, பம்பாய்

பம்பாய், டிச. 15—

"சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றம் சார்பில், 12—1—54ல், கைத்தறி அணிகளை வீதிதோறும் சென்று ரூ 84—3—0க்கு விற்று 'கைத்தறி வாரம்' கொண்டாடினோம்," என்று இணைச்செயலாளர் சா. தாமோதரன் அறிவிக்கிறார்.

சேலம்

சேலம், ஜன. 15—

12—1—54ல், சேலம் நகரில், கைத்தறி நாள் கொண்டாடப்பட்டது. ஒரு வானில் ஏராளமான கைத்தறி அணிகள் வைத்து நகரில் பல பாகங்களில் விற்பனை செய்யப்பட்டது. காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையில் ரூ 1038—14—6க்கு விற்பனை நடைபெற்றது. குறைந்த கால அளவினால், மேலும் பல பகுதிகளுக்குப் போகமுடியவில்லை" என்று செயலாளர் இ. ஆர். கருட்டிணன் அறிவிக்கிறார்.

தேவபாண்டலம்

தி. மு. கழகத் தோழர்கள் க. நாச்சியப்பன், வை. யாசு தேவன், என். பெரியசாமி, டி. பி. சேகவன் ஆகியோர் தேவபாண்டலம், மணலூர்பேட்டை, வடக்கனந்தல், செருவங்கூர், அரியபெருமானூர் ஆகிய ஊர்களில் 9-1-54

திருந்து 13—1—54 வரை கைத்தறி அணி விற்பனை செய்தனர். விற்பனை செய்த தொகை ரூ 553—1—0.

முதல்லலூர்காஸ்

12—1—54ல், கழகத் தோழர்கள் கைத்தறித் துணிகளைக் கொண்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு, முக்கிய தெருக்கள் வழியாகவும், முன்கூட்டியே கூறி வைத்திருந்த இல்லங்களுக்கும் சென்று கைத்தறித் துணிகளை விற்பனை செய்தனர். விற்பனை தொகை ரூ. 254—5—10.

வெங்கிடங்கால்

10-1-54ல், இவ்வூர் தி. மு. கழகத்தினரால், ரூ. 298-2-3க்கு கைத்தறி துணி விற்பனை செய்யப்பட்டது என்று செயலாளர் அ. சந்தானம் அறிவிக்கிறார்.

இடைப்பாடி

13—1—54-ல், இவ்வூரில், இரட்டை மாட்டு வண்டியில் துவிபெருக்கியுடன் விற்பனை செய்ததில், மொத்தம் ரூ 568—13—9-க்கு விற்பனையாயிற்று. கொஞ்சம் முன்பே விற்பனைசெய்திருந்தால், ஆயிரம் ரூபாய் வரையில் விற்றிருக்கலாம் என்று, செயலாளர் பா. பண்டரிநாதன் அறிவிக்கிறார்.

இலட்சிய நடிக மன்றம்

சென்னை, ஜன. 15—

"10-1-54ல், சென்னை 9-வது வட்ட ஏழு கிணறு இலட்சிய நடிக மன்றத்தின் சார்பில், மன்ற அங்கத்தினர்களும், ஆதரவாளர்களுமாக 200-க்கு மேற்பட்ட தோழர்களுடன், முக்கிய வீதிகளில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை கைத்தறி துணிகளை விற்றனர். விற்பனை தொகை ரூ 321—7—6. முன்னாள் நகரசபை உதவியாளர் தோழர் வி. முனுசாமி அவர்களும் கலந்துகொண்டார்" என்று செயலாளர் மு. வரதராசன் அறிவிக்கிறார்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில், 10-1-54 அன்று, தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில், தோழர்கள்: அழகன்பன், இளங்கீரன், பசுமலை சமரசம் (அய்யர்), வானவரம்பன் கைத்தறி ஆடைகளைக் கொண்டு வந்த தோழர் சுவுண்டப்பனும் உடனிருந்து 518-0-0 ரூபாய்க்கு கைத்தறி ஆடைகளை விற்றனர்.

சென்னை

16—1—54 சனி மாலை 5-30 மணிக்கு

இடம்:

பந்தர் ராமாநாயக்கன் தோட்டம் (பிராட்வே டாக்கீஸ் சமீபம்)

தலைவர்: சி. ஆர். பாலசுந்தரம்

பேசுபவர்:

ஆர். எஸ். பாண்டியன்

ஏ. கே. வேலன்

காஞ்சி-கல்யாணசுந்தரம்

திராவிட முன்னேற்றக் கழக அக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களை, அழகிய அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குறுக்கு ரங்காயன செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.